
**நவம்பர் – 28**

# TNPSC துளிகள்

- ❖ தேசிய துக்க தினம் என்பது அமெரிக்காவில் நவம்பர் மாதத்தின் (2021 ஆம் ஆண்டு நவம்பர் 21) 4வது வியாழன் அன்று அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர கொண்டாட்டம் ஆகும்.
  - அமெரிக்காவில் உள்ள பூர்வீக அமெரிக்கர்களைப் பற்றி பொது மக்களுக்குத் தெரிய வைப்பதை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ அண்ணா மேலாண்மை நிலையத்தின் பெயர், இனி "அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி" (Anna Administrative Staff College) என்ற பெயரில் அழைக்கப்படும் என தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு அறிவித்தார்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஆங்கிலத்தில் காவல் கோட்டம்




- ❖ இது 2011-ஆம் ஆண்டிற்கான சிறந்த புதினத்திற்கான (நாவல்) சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஒரு புதினமாகும்.
- ❖ ஒரு எழுத்தாளரும் மதுரை நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினருமான சு. வெங்கடேசன் இதை இயற்றியவர் ஆவார்.
- ❖ மதுரையைப் பற்றிய இந்தப் புதினம், தற்போது ஆங்கிலத்தில் 'தி பாஸ்டியன்' (The Bastion) என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.
- ❖ பட்டு எம்.பூபதி இந்த நாவலை மொழிபெயர்த்திருக்கிறார்.
- ❖ மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் பதிப்பினை சாகித்திய அகாடமி நிறுவனமே

வெளியிட்டிருக்கிறது.

# தேசியச் செய்திகள்

## 37வது CORPAT ரோந்துப் பயிற்சி

- 37வது இந்திய-இந்தோனேசிய ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சியானது இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடத்தப் பட்டது.
- பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக ஓர் ஆண்டில் இரண்டு முறை CORPAT பயிற்சி நடத்தப் படுகிறது.
- இந்தப் பயிற்சியானது 2002 ஆம் ஆண்டில் முதல்முறையாக நடத்தப்பட்டது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியக் கடற்படைக் கப்பலான கஞ்சர் மற்றும் டார்னியர் கடல்சார் ரோந்து விமானம் ஆகியவை CORPAT பயிற்சியில் ஈடுபட்டன.
- இந்தோனேசியக் கடற்படைக் கப்பல் KRI சுல்தான் தாஹா சைஃபுதீன் (376) (Thaha Syaifuddin) இந்தோனேசியா சார்பாக இப்பயிற்சியில் ஈடுபட்டது.



## ஐ.என்.எஸ் வேலா



- ஐ.என்.எஸ். வேலா என்றக் கப்பலானது இந்தியக் கடற்படையில் மேற்கத்தியப் படைப் பிரிவில் (மும்பை) இணைக்கப் பட்டது.
- இது இந்திய கடற்படையின் திட்டமான 75 என்ற திட்டத்தின் 4வது ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல் ஆகும்.

- திட்டம் 75 ஆனது 6 ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டமைப்பதற்கான ஒரு திட்டமாகும்.
- ஐ.என்.எஸ். வேலா கப்பலானது நேவல் குரூப் ஆஃப் ஃபிரான்சு (Naval Group of France) என்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்து மும்பையிலுள்ள மசகான் என்ற கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டது.

## நொய்டா சர்வதேச விமான நிலையம்




- உத்தரப் பிரதேசத்தின் ஜேவார் என்னுமிடத்தில் நொய்டா சர்வதேச விமான நிலையத்திற்குப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.
- ஜேவார் விமான நிலையமானது டெல்லி-தேசிய தலைநகர்ப் பகுதியில் உள்ள 2வது சர்வதேச விமான நிலையமாகும்.
- இது உத்தரப் பிரதேசத்தில் உள்ள 5வது சர்வதேச விமான நிலையமாகும்.
- இந்தியாவிலேயே தற்போது அதிக சர்வதேச விமான நிலையங்களைக் கொண்ட ஒரு மாநிலமாக உத்தரப் பிரதேசம் மாறியுள்ளது.
- கட்டி முடிக்கப் பட்டவுடன், இது நாட்டின் மிகப்பெரிய விமான நிலையமாக இருக்கும்.
- இந்தியாவில் இது முதலாவது சுழியக் கரிம உமிழ்வு கொண்ட விமான நிலையமாக இருக்கும்.


## இந்தியா: உலக வேதிப் பொருள் & பெட்ரோலிய வேதிப் பொருட்கள் உற்பத்தி மையம் மீதான 2வது உச்சி மாநாடு 2021

- உலக வேதிப் பொருள் & பெட்ரோலிய வேதிப் பொருட்கள் உற்பத்தி மையம் மீதான 2வது உச்சி மாநாடானது புது தில்லியில் தொடங்கப்பட்டது.
- இந்த உச்சி மாநாடானது வேதிப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய வேதிப் பொருட்கள் துறையில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.
- இந்த மாநாடு இந்திய வேதிப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய வேதிப் பொருட்கள் துறையின் செயல்திறனை உலகிற்கு எடுத்துரைக்கிறது.
- ஆந்திரப் பிரதேசம், ஒடிஸா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகியன இந்த

நிகழ்வில் பங்குதார மாநிலங்களாக பங்கேற்கின்றன.




## ஊதிய விகிதக் குறியீட்டின் புதிய வெளியீடு




- ❖ மத்தியத் தொழிலாளர் அமைச்சகமானது 2016 ஆம் ஆண்டினை ஒரு அடித்தளமாகக் கொண்டு ஊதிய விகிதக் குறியீட்டின் புதிய வெளியீட்டினை வெளியிட்டுள்ளது.
- ❖ பொருளாதார மாற்றங்களின் தெளிவான விவரங்களை வழங்குவதற்கும் ஊழியர்களின் ஊதிய முறையைப் பதிவு செய்வதற்குமான முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகளுக்காக ஊதிய விகிதக் குறியீட்டின் அடிப்படை ஆண்டினை அரசு அவ்வப்போது மாற்றி அமைக்கிறது.
- ❖ 2016 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட இந்த குறியீடானது (100) 1963-65 ஆம் ஆண்டு வெளியான பழைய வெளியீட்டிற்கு மாற்றாக அமையும்.

## விதைகளை அடைதலுக்கான குறியீடு – 2021

- ❖ உள்நாட்டு விதை உற்பத்தித் துறையில் அதிகளவில் உலக விதைத் தொழில்துறையின் முதலீடுகளை ஈர்க்கும் 6 தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.
- ❖ இது விதைகளை அடைதலுக்கான குறியீட்டின் (2021) 3வது பதிப்பின் படி உள்ளது.
- ❖ இந்தக் குறியீடானது உலக தரப்படுத்துதல் கூட்டணியின் ஒரு பகுதியாக வெளியிடப் பட்டது.

- இந்தக் குறியீடானது, சிறு விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான உலகின் முன்னணி விதை நிறுவனங்களின் முயற்சிகளை மதிப்பிட்டு ஒப்பிடுகிறது.
- இதில் 21 நிறுவனங்கள் 9 நாடுகளில் அதன் செயல்முறை மையங்களைக் கொண்டு உள்ளன.
- அவற்றுள் 17 நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன.

## தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் கிரையோ ஜெனிக் ராக்கெட் எஞ்சின்




- ஹைதராபாத்தில் அமைந்துள்ள ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் (Skyroot Aerospace) எனப்படும் விண்வெளி தொழில்நுட்பப் புத்தாக்க நிறுவனமானது தவான் – 1 எனும் ஒரு எஞ்சினை வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- இது தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது முழுவதும் கிரையோஜெனிக் தொழில்நுட்பம் கொண்ட ராக்கெட் எஞ்சின் ஆகும்.
- இது பயன்பாட்டிற்கு வர உள்ள விக்ரம் – 2 எனும் சுற்றுப்பாதை ஏவு கலத்தின் மேல்நிலைகளுக்கு ஆற்றல் ஊட்டும்.
- தவான்-1 என்பது முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கிரையோஜெனிக் எஞ்சின் ஆகும்.
- இது மீவெப்ப உலோகக் கலவைக் கொண்ட முப்பரிமாண அச்சிடல் முறையில் (3D printing with a superalloy) உருவாக்கப்பட்டது.
- முப்பரிமாண அச்சிடல் முறையின் பயன்பாடானது சுமார் 95% உற்பத்தி நேரத்தைக் குறைத்துள்ளது.
- இந்த எஞ்சின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் திரவ ஆக்சிஜன் கொண்டு எரியூட்டப் படுகிறது.

## நதி நகரங்கள் கூட்டணி

- ஜல் சக்தி அமைச்சகமானது சமீபத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்துடன் இணைந்து நதி நகரங்கள் என்ற கூட்டணியைத் தொடங்கியுள்ளது.
- இது நகர்ப்புறங்களின் வழியே பாயும் நதிகளின் நிலையான மேலாண்மைக்காக வேண்டிய கருத்துகளை உருவாக்கவும், அவற்றை விவாதிக்கவும் மற்றும் அது பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்குமான ஒரு பிரத்தியேக தளமாகும்.
- இந்தக் கூட்டணியானது கட்டமைத்தல், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப ஆதரவு போன்ற மூன்று பரந்த கருத்துருக்கள் மீது ஈடுபாடு செலுத்தும்.
- கங்கைப் படுகையிலுள்ள நகரங்களில் இந்தக் கூட்டணி தொடங்கப்பட்டாலும் அதற்கு அப்பால் உள்ள நகரங்களுக்கும் இது நீட்டிக்கப்பட்டது.




## தக்சின் சக்திப் பயிற்சி

- இந்திய தரைப் படை, கடற்படை மற்றும் விமானப் படை மற்றும் இதர துணை ராணுவப் படைகள் ஆகியவற்றின் ஒரு கூட்டு இராணுவப் பயிற்சியான 'தக்சின் சக்தி' இராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் நவம்பர் 26 அன்று நிறைவடைந்தது.
- இந்தப் பயிற்சியானது நவம்பர் 20 அன்று தொடங்கியது.
- ஆயுதப் படைகள், விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய பிரிவுகளிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினை நிறுவுவதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## SWOT ஆய்வுத் திட்டம்

- மேற்பரப்பு நீர் மற்றும் பெருங்கடல் நில அமைப்பு ஆய்வுத் திட்டமானது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விண்ணில் ஏவப்பட உள்ளது.
- SWOT (Surface Water and Ocean Topography Mission) திட்டமானது ஐக்கிய ராஜ்ஜியத்தின் விண்வெளி நிறுவனம் மற்றும் கனடா விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் பங்களிப்புகளுடன் கூடிய, நாசா மற்றும் பிரான்சு தேசிய விண்வெளி ஆய்வு மையம் ஆகியவற்றிற்கிடைப்பட்ட ஒரு ஒத்துழைப்புத் திட்டமாகும்.
- SWOT ஆய்வுத் திட்டத்திற்கான செயற்கைக் கோளானது புவியிலுள்ள பெருங் கடல்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் உள்ளிட்ட உப்புநீர் மற்றும் நன்னீர் ஆதாரங்களின் உயரம்

குறித்த தரவுகளை சேகரிக்கும்.

- இது உலகெங்கிலும் உள்ள நீர் ஆதாரங்களின் அடர்த்தி மற்றும் அமைவிடங்களைக் கண்காணிப்பதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கு உதவி வழங்கும்.



# மாநிலச் செய்திகள்

## இணையவழி தாலுக்கா – மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேச மாநில அமைச்சரவையானது இணையவழி ரீதியில் தாலுக்காவை உருவாக்குவதற்கான ஒரு முன்மொழிதலுக்கு ஒப்புதல் அளித்தது.
- இணையவழி தாலுக்காவை உருவாக்க உள்ள முதல் இந்திய மாநிலமாக மத்தியப் பிரதேசம் மாற உள்ளது.
- இந்த இணையவழி தாலுக்காக்கள் சொத்துகள் மற்றும் நிலங்களின் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் அமைக்கப்படும்.

# விளையாட்டுச் செய்திகள்

## பாட் கம்மின்ஸ்



- ஆஸ்திரேலியாவின் 47வது டெஸ்ட் போட்டி அணித் தலைவராக பாட் கம்மின்ஸ் நியமிக்கப் பட்டுள்ளார்.

- ஸ்டீவ் ஸ்மித் அந்த அணியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- டிம் பெய்னேவையடுத்து பாட் கம்மின்ஸ் அணித் தலைவராக பொறுப்பேற்கிறார்.
- 1956 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆஸ்திரேலிய ஆடவர் டெஸ்ட் போட்டி அணியின் முழு நேரத் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முதல் வேகப்பந்து வீச்சாளர் என்ற ஒரு பெருமையை கம்மின்ஸ் பெற்றுள்ளார்.


# முக்கிய தினங்கள்

### உலக ஆலிவ் மர தினம் – நவம்பர் 26




- இத்தினமானது 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டின் 40வது கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.
- ஆலிவ் மரத்தின் பாதுகாப்பையும் அது உள்ளடக்கியுள்ள பல்வேறு மதிப்புகளையும் ஊக்குவிப்பதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- இந்த தினம் மனித குலத்திற்கு இது வழங்கும் சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த முக்கியத்துவத்தினை மேம்படுத்துவதற்கான ஒரு தினமாகும்.

### தேசிய பால் தினம் – நவம்பர் 26




- இத்தினமானது டாக்டர் வர்கீஷ் குரியன் அவர்களின் பிறந்த நாளின் நினைவாக 2014 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

- இவர் 'இந்தியாவின் பால் மனிதர்' எனவும் அழைக்கப்படுகிறார்.
- இவர் உலகளவிலான, மிகப்பெரிய, வேளாண் சார்ந்த ஒரு பால்பொருள் துறை மேம்பாட்டுத் திட்டமான 'ஆபரேஷன் ஃப்ளட்' எனும் ஒரு திட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

## இந்திய அரசியலமைப்பு தினம் – நவம்பர் 26

- இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டதினை நினைவு கூரும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது அரசியலமைப்பு தினம் (அ) சம்விதான் திவாஸ் என்ற பெயரில் கொண்டாடப் படுகிறது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த அரசியலமைப்புச் சட்டமானது 1949 ஆம் ஆண்டின் இதே நாளில் தான் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- 2015 ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று, டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களின் 125 பிறந்த நாளின் முழு ஆண்டு அளவிலான கொண்டாட்டத்தினை முன்னிட்டு நவம்பர் 26 ஆம் தேதியானது இந்திய அரசினால் அரசியலமைப்புத் தினமாக அறிவிக்கப்பட்டது.
- முன்பாக இத்தினமானது சட்ட தினமாக கொண்டாடப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★